உ

திருக்கோயில்

# சித்திரவேலாயுத சுவாமி பேரில் போற்றிப் பதிக மாலை



ஆக்கியோன்


கலாபூஷணம் [illegible] விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஓம் ஸ்ரீ சித்தி விநாயகா நமஹ

திருச்சிற்றம்பலம்

காப்பு

**வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள்**
**நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு**
**துப்பார் திருமேனி தும்பிக்கை யான்பாதம்**
**தப்பாமற்சார்வார் தமக்கு**

## திருக்கோயில்

# சித்திரவேலாயுத சுவாமி பேரில் போற்றிப் பதிக மாலை

ஆக்கம்:

**புலவர். நாகமணி விநாயகமூர்த்தி**

ஈஸ்வரி வெளியீடு - 27
சேனைக்குடியிருப்பு
15.07.2011

விலை: [redacted]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

குருநாதன் துணை

வேல்மாறல்

திருத்தணியில் உதித்தருளும் ஒருத்தன் மலை விருத்தன்
எனதுளத்தில் உறைகருத்தன் மயில் நடத்துகுகன் வேலே

தென்னாடுவேலூர் திருப்பதியாம் வள்ளிமலை
தன்னிலுறை செம்மல் தரணிபுகழ் பாலானந்தன்
என்னாளும் எம்மிதயத் தாமரையில் குடிகொண்ட
குருநாதர் திருவடியை என்சென்னில் வைப்பாம்

## திருப்புகழ்

ஐங்கரனை ஒத்தமனம் ஐம்புலன் அகற்றிவளர்
அந்திபகல் அற்ற நிலை - அருள்வாயே
அம்புவி தனக்குவளர் செந்தமிழ் வழுத்திஉனை
அன்பொட துதிக்க மனம் - அருள்வாயே
தங்கிய தவத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திர வெளிக்குவளி - அருள்வாயே
தண்டிகை கனப்பவுசு எண்டிசை மதிக்கவளர்
சம்ப்ரம விதத்துடனெ - அருள்வாயே
மங்கைய சுகத்தை வெகு இங்கிதம் எனுற்ற மனம்
உந்தனை நினைத்தமைய - அருள்வாயே
மண்ணடலிக ரப்பகலும் வந்த சுப சனாக்ஷ புரி
வந்தணைய புத்தியினை - அருள்வாயே
கொங்கில் உயிர் பெற்றுவளர் தென்கரையில் அப்பரருள்
கொண்டுஉடல் உற்ற பொருள் - அருள்வாயே
குஞ்சர முகற்கிளைய கந்தனென வெற்றிபெறு
கொங்கன கிரிக்குள் வளர் - பெருமாளே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்

# திரு முருகன் திரு அகவல்

**பருகு செந்தமிழ் பண்டிதன் மீதில் யான்**
**உருகி உள்ளத் திருத்தி அனுதினம்**
**முருகன் அகவல் முன்மொழி ஐங்கரப்**
**பெருகு வயிற்றுப் பிள்ளையின் தாள்துணை.**

**அகவல்**

அய்யனே அறுமுகா அருகினில் வாவா
மெய்யனே உன் புகழ் விளம்பிட எனக்க
ஐய்யமதகற்றி அன்பு தந்தாள்வாய்
துய்யனே கைவேல் சுடர் போலேழுந்து
வையகம் போற்ற வாவா முருகா
அகத்தில் நெஞ்சில் அன்போடிருந்து
சிவத்தின் கதிரே சேயோன் அருள்தா
எம் குலத்தின் கொழுந்தே குகனே அடியேன்
பவத்தின் மனதைப் பதியாதகற்றி
தவத்தில் இருக்கச் கண்முகா அருள்தா
தியான நிஷ்டையில் சேர்பிங்கலையில்
இடை கலையின் நாசினியின் இரண்டின் நடுவே
ஓங்கி எழுந்திடு ஓம் எனும் பிரணவம்
தாங்கிய வடிவே சரவண பவாயா
பவனொளி பவாயா பாலகா வேலவா
தாரகா சூரனை சமரினில் கொன்றவா
கோலகா மயில் வரு கோழிக் கொடியனே
சீலனே செந்திவளர் தெய்வானை லோலனே
மாலனே மாயோன் மருகனே வள்ளியுடன்
மஞ்சள் நீராடியே மகிழ்ந்தவா உகந்தையில்
தென் கதிரை வாசனே தேவர் சிறைமீட்டவா
தயான சிவசக்தி தந்த வேலாயுதா
தீராத வெந்நோய்கள் தீர்த்துவிடு அப்பனே
சுப்பனே சோதியே கர்ப்பூரவாசனே
எப்போதும் உனது புகழ் செப்பிட எந்நாவில்
நிற்க அருள் செய்குவாய் நிர்மல ரூபனே
தர்க்கமிடு வள்ளிக்கு சந்நியாசி ஆனவா
மிக்கவரு வேடரெதிர் வேங்கை மரவானவா
பாங்கான அவ்வைக்கு பழம் பல கொடுத்தவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூங்கி எழு சூரனை தாங்கு மயிலாகவே
வாகனமதாக்கியே வான்மீது சென்றவா
சென்றவா திருப்பரம் குன்று தோறாடிவரு
தேவாதி தேவனே இராச கெம்பீரனே
முத்தமிழ் தெய்வமே மூவிரு முகத்தனே
சித்தர்கள் போற்றிடு தில்லை வேலாயுதா
அத்தனே அடியேன் முன் அன்புடன் எழுந்துவா
சுத்திவரு கோள்களின் துணைகொண்ட ராசனே
எத்திவரு இடும்பனை இணைகொண்ட வருகுவாய்
வருகுவாய் வடிவேலா மரகத எழிலோடு
பழனி மலை தாண்டியே பாங்குடன் எழுந்துவா
கழுகு மலை தனிலுறை கந்தவேள் எங்களை
அணுகிவரு எமனும் ஏவலும் இடர்களும்
சூனியப்பேய்களும் தொல்லைதரு சாத்தானும்
காத்தணுவு கண்ணூறு காமாலைக் காய்ச்சலும்
வீரவேல் கைகொண்டு விரட்டியபடி அப்பனே
துணிவு கொண்டடியேன் தொழுது பணிந்திட
கனிவுடன் காண்பார் களுதூவளை அப்பனே
மனையிலும் வளியிலும் மாற்றான் தன் எதிரிலும்
நினைத்திட முன்னெழு நின்மய ரூபனே
ஆனையுடன் கரடியும் அரவுபுலி மிருகமும்
தானெதிர்படாமலே சண்முகதிருப்பிடு
நல்லை நகர்நாதனே தொல்லை வினைபோக்கிடு
கல்லினில் ஒளி தந்த கண்கண்ட தெய்வமே
ஆண்டியாய் ஆன அழகேசா உந்தனை
வேண்டிப்பணிந்திட வினைகள் பலதீருமே
குட்டுண்டு பிராமவை கொண்டு சிறைவைத்தவா
நிஷ்ட அறுகோணத்தில் நின்று நடமிட்டவா
சிஷ்ட பரிபாலனே சிங்கார குமரனே
கலியுகத்தெய்வமே காட்சிதர வேணுமே
மயில் ஏறி ஆடிவரு மண்டூர்க் கந்தனே
துயில் கொள்ளும் நேரமதில் துணையாய் இருந்திடு
திருக்கோயில் தனிலுறையும் சித்திர வேலாயுதா
திருநீறு தானணியும் சிவசுப்பிரமணியனே
வெருகலம் பதியலுறை வேலாயுதக் கடவுளே
அருகாக வந்தெமக் காறுதல் தந்திடு
பருகு தமிழ் பாவெனும் பக்தி கொண்ட கவலை
பாடியே பராயணம் செய்த அடியார்களை
காத்திட கந்தா கடம்பா இடும்பாவா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடம்புரி திலோத்தமை நட்டுவங்களும்
கிங்கிணி ஆர்ப்பவே சங்கொலி முழங்கவே
கிரகிரி ஆடிட அடியவர்கள் பாடிட
அரோகராப் போடவே அறுமுகவருகவே
பரமனிட பாலனே பாவி எமைக் காருமே
அருணகிரி நாவிலே அமிர்தம் கொடுத்தவா
கருணயங் கடலிலே கரிமுகற்கிளையவா
குமரவேற்கடவுளே குழந்தை எனைக்காக்கவா
அமரர்கள் இடர் தீர்த்த அப்பனே சண்முகா
திகழ் பெரிய தேவனே செந்தமிழ் தெய்வமே
அழகனே ஐங்கரன் கணநாதன் சகோதரா
பழமுதிர் சோலைவாழ் பார்பதி புத்திரா
குழகனே கோலமயிலேறு குமரனே
எங்கள் குலதெய்வமே திங்களொளிவானவா
தங்கமுகமாறுமாய் இங்கெழுந்தருள்புரி
இளநகை வள்ளியின் இனிய மணவாளனே
ஒயிலான தெய்வானை யோடுறவாடும் தெய்வமே
பயில்கின்ற கலைகளில் உன் பார்வைகொடு தந்தையே
முந்தை வினை எந்தனை முத்தொடராமலே
உந்தனை நம்பினேன் உகந்தை மலைவாசனே
வந்தாடும் மாமயில் வாசனே நேசனே
கந்தா கடம்பா இடும்பா எனையாளவா
இதுவேளை இத்தருணம் எதிரேறு முருகனே
அறுஅறுவேல் விடு தடையற முறிபட
விடுவிடு வெட்டற கட்டறப் பொடிபட
அட்டமா சித்தும் என் ஆணையில் நிற்கவே
அப்பனே சண்முகா அறுமுகா வருகவே
திருமாலின் மருகனே சீக்கிரம் ஓடிவா
தேடிவா நாடிவா சேவல் கொடி கூவிவா
ஆடிவா மயிலது அம்மை இருபேரும்வா
காணவா வேலே கந்தா என்கருத்தில் வா
பேயவா பணியவா பெற்றதாய் உமையும் வா
மாலும் வா அரனும்வா மாமேரு உறைவோய் வா
வேவலும் வா வந்து விரைவுடன் ஒளியும் தா
நாணியுமை போற்றினேன் நாதா நின்சரணமே
சரணமே சரணமே சரவணபவாயனே
போற்றினேன் அப்பனே உன் பொன்னடி போற்றினேன்
சரணம் சரணம் சரவணபவ ஓம் சரணம்

சுபம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## துதி

**அத்திமாமுகனை நித்தம் நினைத்தடியேன்**
**பக்தியோடு போற்றிப்பாமாலை பாடுதற்கு -சித்தமருள்**
**வல்லவைஞான வரதன் கணபதிஎன்**
**உள்ள மதில் நின்று உதவியருள் ஐங்கரனே**

நூல்

01 அப்பனே திருமுகா அரனார்மைந்தா
அம்மை உமை தானணைத்த அழகுபாலா
எப்போதும் இக்கவிக்கு இடர் வராது
எங்கள் கலைவாணி வந்தினதாய் நிற்க
முப்பொழுதும் வேதியர்கள் வேதமோதி
முருகையா உன்தனற்கு பூசை செய்வார்
செப்புதிருக்கோயில் வந்தமர்ந்த வேலே-சுவாமி
சித்திரவேலயுதனே அருள் தேவே போற்றி.

2 ஆதவன் தான் தன்னொழியை அள்ளிவீச
அலை தாவிக் கரைதொட்டு நுரைகள் மேவ
வேலவனே வெளிவீதி தேர் உலாவும் காட்சி
விண்முட்டும் அரோகரா கோசமப்பா
சோதனைகள் ஒவ்வொன்றாய்த் தருவதேனோ
துயர் தீர்ப்பாய் திருச்செந்தூர் அமைவாய்யுள்ளோய்
வேதனைகள் நீக்கியருள் திருக்கோயில் வேலே -சுவாமி
வித்தகனே நித்த மருள் தேவே போற்றி

3 இச்சை அற்று இருப்பதற்கு வரத்தைத் தாதா
என்னுள்ளே நீ அமர்ந்து இரக்கம் தாதா
அச்சமின்றி அறுமுகனே மக்கள் வாழ
அபயகரம் நீட்டி எமை அணைக்கவாவா
பச்ச மயில் ஏறி இரு தாய்மாரோடு
பரந்தாமன் மருகோனே நீ பறந்து வாவா
உச்சிதமாய் திருக்கோயில் அமர்ந்த வேலே-சுவாமி
உமை மகனே காத்து அருள் தேவே போற்றி

4 ஈரைந்து சிரமுடைய இராவணன் தன்
இன்னுயிரைத் தானழித்து இரணியன் தான்
மாபெலியும் அசுரர்களும் அதர்மத்தாலே
மாயனிட சக்கரத்தால் இறந்து மாண்டார்
சேயோனே இங்கதர்மம் கூடுதையா
சீக்கிரத்தில் வந்திடுவாய் திருவேலையா
பார் தனைக்க திருக்கோயில மர்ந்த வேலே -சுவாமி
பாலகுமரேசனே காத்தருளும் தேவே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5 உற்ற சிவசக்தி அருள் பாலா வாவா
ஊள்வினைகள் பறந்தோட வேலா வாவா
பற்று வைத்துன் மீது பாடியாட
பண்ணு தமிழ் கடவுளே நீ பறந்து வாவா
சிற்றானை தெய்வமகள் வள்ளியோடு
சீக்கிரத்தில் மயிலேறி எதிரே வாவா
அற்றவர்க்கு அருளும் திருக்கோயில் வேலே- சுவாமி
அறுமுகனே வரமருளும் தேவே போற்றி

6 ஊருக்கும் உன் கோயிலுக்கும் ஒரு பேரப்பா
உயர் நீடு கோபுரமும் அழகேயப்பா
பாருக்குள் உன்பதிதான் செந்தூரப்பா
பழநாவற்பதி எனவும் விளங்குதப்பா
நேரக்கு தேர் வடத்தை பிடித்திளுக்கும்
நின்னடியார் கவலைகளைத் தீருமப்பா
போர் பெருதி திருக்கோயில் அமர்ந்த வேலே - சுவாமி
புகழ் சேவற்கொடியோனே அருளும் தேவே போற்றி

7 என்னப்பா உன் .கருணைக் கீடுஏது
இத்தலத்தை பணிவோர்க்கு பயமுமேது
அன்னமது பாலிப்பு அமுதமப்பா
அடியார்க்குத் தொண்டு செய்வோர் அனேகமப்பா
விண்ணப்பம் செய்து உன் தீர்த்தமாட
விரும்பி வரும் மக்கள் பெருவெள்ளமப்பா
சென்னல் விணை திருக்கோயில் அமர்ந்த வேலே - சுவாமி
சிறி முருகா தாத்து அருள் தேவே போற்றி

8 ஏளைகளுக் கீயாத கர்மியானேன்
ஈன்ற தாய் தந்தையரைப் போற்றா தானேன்
வேளையிலே பசித்தோரை விரட்டலானேன்
வேண்டுவது கொடுக்காத நப்பியானேன்
காலையிலே நீறணிந்து சிவமே என்று
கடவுளையான் போற்றாத பாலியானேன்
வாலை சிறுவேலழகா மடையனென்னைச் சுவாமி
மன்னித்து ஆண்டருளும் தேவே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9 ஐயனே உன் பதியை வலம் சுற்றாத
அரும்பாவி குருநிந்தை செய்த பாவி
மெய்யினிலே ஐந்தெழுத்தை நினையாப்பாவி
விரதமதைக் கனவிலும் நான் எண்ணாப்பாவி
கைகுவித்து கந்தா முருகா என்று
கருதுமுடல் செய்யாத கருமபாவி
தெய்வமே திருக்கோயில் உறையும் வேலே-சுவாமி
திருத்தி எனை ஆண்டருள்வாய் தேவே போற்றி

10 ஒன்றுமறியேன் வினைகள் என்னைச் சூழ்ந்து
உருக்குலைந்து அடியேனை வருத்துதையா
கன்றுக்கிரங்குகின்ற பசுவைப் போலே
கருணை கொண்டு கடைக்கண்ணால் பாரேனப்பா
அன்றமாரர் இடர் தீர்த்த அழகுபாலா
அடியாரின் பிணி நோயை அகற்றெண்ணதோ
இன்று உன் திருக்கோயில் வலமாய் வந்தேன் - சுவாமி
ஏழை எனைக் காத்தருளும் தேவே போற்றி

11 ஓம் சரவணனே சடாட்சரனே எழுந்து வாவா
ஓங்காரா றீங்காரா ஓடி வாவா
ஓம் சிவசிவ சண்முகனே சீக்கிரம் வாவா
சிந்தைதனில் குடிகொண்ட சிவமே வாவா
ஓம் பவ குவ நமசிவ அருட்பாலா வாவா
பார்வதியாள் தந்தவேல் சாமி வாவா
ஓம் சிவாயறீங் திருக்கோயில் வேலேவந்தென் சுவாமி
தீமை பகை மாற்றியருள் தேவே போற்றி

12 ஔவை கனிகொடுத்த சிறு அழகா போற்றி
ஆசை கொண்டு வள்ளி தனை அணைத்தாய் போற்றி
செவ்வையுறு திருக்கோயில் வேலே போற்றி
செந்திவளர் அறுமுகனே குமரா போற்றி
சௌவும் ஓம் தமிழ்க் கனியே தலைவா போற்றி
சகல கலை தயாபரனே தந்தை போற்றி
உவ்வெனும் உகந்தைமலை ஒளியே போற்றி - சுவாமி
ஓம் சம்போ சிவகுருவைப் போற்றினேனே

13 அஃகரனே ஆடிஅமாவாசை உன் தீர்த்த நன்னாள்
அடியேனின் தந்தை தாய் என் முன்னோருக்கும்
என் பிரமை தோசமுடன் பிணியும் மாற
இத்தீர்தம் ஆடிடவே ஓடிவந்தேன்
சங்கொலிசேர் சங்கமன்கண்டியானின்
சகோதரனே திருக்குமரா சித்திரவேலா
பங்கையஞ்சேர் மடமாதர் போற்றும் தேவே சுவாமி
பழமைசெறி சித்திரவேல் பதியே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14 தங்க மயில் தேரேறி வரவுங்கண்டேன்
தாளமுடன் காவடிகள் ஆடக்கண்டேன்
துங்க மணிமார் பழகா தோகை மாதர்
சுடர் தலையில் கற்பூரச் சட்டி கண்டேன்
வங்கக் கடல் இரை ஓசை அலை வரவும் கண்டேன்
வணங்குகின்ற அடியார்கள் கூட்டம்கண்டேன
திங்களுக்கு ஒப்பான திருச் செந்தூர்க் கந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் தேவே போற்றி

15 தாங்க வொண்ணா அனர்த்தத்தால் மக்களெல்லாம்
தடுமாறி இடம் பெயரக் கண்டேனையா
தீங்கொன்று செய் தறியா நல்லோரெல்லாம்
தினம் மடியக் கண்டேனே திருக்கை வேலா
ஏங்குகின்றார் இராப்பகலாய் தூக்கமற்று
எது நிகழும் நாமறியோம் வடிவேலையா
வீங்கி முகம் விறைக்குதையா செந்தூர்க் கந்தா - சுவாமி
வித்தகனே சித்திரவேல் தேவே போற்றி

16 திருக்குமரா வடம் பிடிக்கு அடியார் கண்டேன்
தேவ வள்ளி குஞ்சரியு மிருக்கக் கண்டேன்
உருக்கமுடன் பணிவிடை செய் உள்ளம் கண்டேன்
ஓம் முருகா திருப்புகழின் ஓசை கண்டேன்
அழுக்கழைந்து ஆயிரம் பேர் உறுளக் கண்டேன்
அறுமுகனே ஜெக சோதி வடிவு கண்டேன்
புகனாறு முகமுடைய செந்தூர்க் கந்தா - சுவாமி
புதுமை செறியும் சித்திர வேல் தேவே போற்றி

17 தீராத வினை தீர்க்கும் திருக்கோயில் வேலா
சிவனடியார் மனக்கவலை தீர்க் கொண்ணாதோ
வாராது இருப்பதற்கு வன்ம மேதோ
வருந்தி உனை அளைப்பதுவுன் செவிகேளாதோ
பாராயோ பன்னிரு விழியாலெம்மைப்
பறந்தோடப் பாவவினை தீருமையா
திருவாறு முகமுடைய செந்தூர் கந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் தேவே போற்றி

18 துடியிடையாள் குறமாது தன் தினைப்புனத்தில்
சொல்லறிய வேடுவனாய்ச் சென்று அங்கு
மடமயிலே மான் ஒன்று என் அம்பு பட்டு
வந்தனவா இவ்வரவ வளியின் மீது
திடமுடனே சொல்லடி நீ என்று கேட்டு
திருக்குமரா அவளகை ரசித்த சீலா
திகடனுக்கிளையவனே செந்தூர்க் கந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் தேவே போற்றி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 தூதாகி அர்சுனர்க்கு தேர் செலுத்தி
துரியனுடன் அவன் படையும் சேனைதானும்
வாதாவிமானமுடன் கொன்றொழித்த
மாயோனின் மருகோனே சுவாமி நாதா
வேதாவும் விண்ணவர்களும் போற்றுகின்ற
விமலனருள் புத்திரனே கங்கை மைந்தா
தீராத வினை தீர்க்கும் செந்தூாக் கந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் தேவே போற்றி

20 தெய்வமே உன் கருணைக் கீடு ஏது
தினம் வந்து பணிபவர்க்கு பயமுமேது
ஐயாவே தனி வழியில் அடியேன் சென்றால்
ஆனை புலி கரடி பன்றி அஞ்சி ஓட
மெய்யாக ஆணை ஐயா என் உயிர் பிரிந்தால்
விருப்பமுடன் தேவ சபை சேர்த்திடையா
தெய்வானைக் குகந்தவனே செந்தூர்க் கந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் தேவே போற்றி

21 தேன் தினை மா உண்ட கனி வாயா வாவா
தெய்வானை வள்ளி பங்கா திருப்பி வாவா
கூனாகி கிழவனுரு கொண்டாய் வாவா
குறவர் மனை புகுந்தவனே குருவே வாவா
வான் நீடு மரமான வடிவே வாவா
மகிழ் நாவற் பதியானே மகிழ்ந்து வாவா
சீர் கரையில் அலை தாவும் செந்தூர்க் கந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் தேவே போற்றி

22 தையளர்கள் பூச் சொரிந்து கவரி வீச
தாளமுடன் நாதசுர மேள மார்ப்ப
ஐயனே கற்பூர ஆலாத்தி ஏந்தி
அரிவையர்கள் ஐங்கரனின் வடம்பிடிக்க
மெய் சிலிர்க்கும் வேலவனே முருகா என்று
வேண்டி வரும் அடியார்கள் பின்னே செல்ல
கைகுவித்துப் போற்றுகின்றேன் செந்தூர் கந்தா - சுவாமி
கருணைதர வேலா அருள் தேவே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

23 தொடருகின்ற கிரகபகை மனை சூளாது
சுந்தரனே தடுத்தாள்வாய் ஏளை எம்மை
இடரேது மலை போலும் வந்தாலும் தான்
எம் முருகா பனிப்போலே மாற்று மையா
படருகின்ற கொடிப் போலே எந்தனுள்ளம்
பற்றுவைத்துத் தொடருதற்கு நினைக்குதையா
மட மாதர் வாழ்பதியாம் செந்தூர்க் கந்தா - சுவாமி
மன்னவனே திருக்கோயில் அருள் வடிவே போற்றி

24 தோன்றுதற்கு முன் பாணத் துறையூர் ரென்பார்
சுற்றிவர உன் தாய்மார் தலங்கலென்பார்
ஆங்கதனில் தம்பிலுவில் கண்ணகைத் தாய்
அருள் கொடுக்கா வைகாசித் திங்கள் தன்னில்
தீங்ககற்றும் மாணிக்கப் பிள்ளையாரும்
செல்வமுடன் கல்விகளும் பகுந்தழிக்கார்
சென்னல் வினை நற்பதியாம் செந்தூர்க் கந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் தேவே போற்றி

25 தௌ தாள முரசொலிக்க சகல கலா சத்தி
தாய்யவளும் குடிகொண்ட தலங்கள் கண்டேன்
மௌவ் வெனவும் மகமாரி மங்கை மாரி
மாகாளி விளையாடு மாட்சி கண்டேன்
சௌவென்று சராசரமாய் உமையும் தானும்
தற்காத்து அரசாளும் தன்மை கண்டேன்
சீர் சிறந்த மறவர்பதி செந்தூர்க் கந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே அருள் தேவே போற்றி

26 இத்தலத்தில் மகிமை புரி வேலா போற்றி
எம்குலத்தில் தலைமகனே இறைவா போற்றி
அத்தனுக்கு பிரணவத்தை உரைத்த எங்கள்
ஆறுமுகக் கடவுளே போற்றி போற்றி
இத்தரையில் எங்கணுமே முருக நாமம்
இடியோசை போல் முழங்க வைப்பா போற்றி
சித்திர நாயகனே செந்தூர்க் கந்தா - சுவாமி
சித்திர வேலாயுதனே உன் தாழ் போற்றினேனே

-சுபம்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருமுருகன் திருவிருத்தம் ஆறு

அய்யனே கதிர்காமத் தெய்வமே அடியேனை
ஆதரித்தருளும் முருகா
அடிமை போலென்றாளும் பிடிசிறையில் வாடுகிறேன்
அல்லும் பகலும் அழுகின்றேன்
நினைவெல்லாம் உன்மீது அலைபோலும் வருகுதே
என் நெஞ்சமும் புண்ணாகுதே
நீ அன்றி மற்றொரு தெய்வமெனக் கில்லையே
நின்னை ஏன் சோதிக்கிறாய்
ஏதுக்கு வேலனே நீதிக்கு மாறாக
என்னோடு வழக்காடுகிறாய்
இதுதானே உந்தனை நம்பின அடிமைக்கு
ஏமாற்றும் வித்தையிதுவோ
ஏன் முருகா நீ வரவும் ஆடிவரும் வேல்கண்டு
எழுந்து தான் கூவி தொழுவேன்
ஏகாந்த நாதனே உகந்தை மலை வாசனே
என்னப்பனே கதிரைவேலே

நித்தமும் உந்தனை பக்தியாய் பணிகின்ற
நின்னடியார் கூட்டம் வேண்டும்
நினைவிலும் கனவிலும் நின் ஆறுமுக மதனை
நினைவுறக் காண வேண்டும்
நிறைந்தமன தன்போடு உந்தனைத் தவறாது
நினைக்கின்ற நெஞ்சம் வேண்டும்
அன்னையைப் போலும் என் பின் வயது தன்னிலே
ஆசார உபசாரமாய்
அனுதினம் பணிவிடை செய்கின்ற மனைவியும்
அருகினில் இருக்க வேண்டும்
ஆறுமுகா பெரியோரின் ஆசியும் நேசமும்
அகலாத சந்தானமும்
அன்புள்ள மக்களும் சுற்றமும் இல்லமும்
அறப்பணிபுரிய அருள்வாய்
ஐயனே எனது குறைதீர்த்தருள வருகுவாய்
ஆறுமுகா கதிரைவேலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனாய்ப் பிறந்து நான் மண்மீது தன்னிலே
மாறாது ஏது செய்ததேனோ
மாற்றறிய வேலவா ஊத்தை நிறை சடலத்தை
மண்மீது சுமந்து கொண்டு
பசி என்று ருசி என்று பற்பல விதமாக
பாழ்வயிற்றை நிரப்பி
அசையாத மரம் போலும் உறங்கிக் கிடந்ததுமே
அனியாய மாகப் பொழுதை
போக்கினேன் வேலனே நீக்கிவிடு அகந்தையை
பொன் மயமான உன்னை
எப்பொழுதிலும் வணங்கித் துதிக்க அருள்புரிகுவாய்
புனித வேல் முத்துக்குமரா
அதீதீர சமராடி உறவாடி எனை நாடி
அலைபோலும் வருவேலனே
அங்கெங்கு திருக்கோயில் திங்கள் எதிர் கதிர்வீசும்
எழில் அழகனே கதிரை வேலே

அடியேனைப் பலமுறை தடமாற வைப்பது
அழகல்ல செந்தில் குமரா
குடிகேடு வஞ்சனை பழிபாவம் பொற்றோரைக்
கொடுமை புரியாத செயலும்
மடியமுன் என்னாவி பிரிகின்ற போதிலே
மாறாத உன்நா மமும்
கடிதான நாவினால் வடிவேல் எனக்கூறி
கண்மூடி உயிர் பிரியணும்
படிக்கின்ற புத்தகத் துள்ளிருந்து எனைப்
பார்த்துச் சிரிக்க வேண்டும்
பலகாலம் உன்தலம் சுற்றித் திரிந்து அங்கு
படுத்தே உறங்க வேண்டும்
சிலநேரம் என்னோடு மயில் வந்து ஆடிடச்
சிறிமுருகா கருணைபுரிவாய்
சித்தாண்டி வாசனே சிறியேனின்குறைதீரும்
சிறிமுருகா கதிரைவேலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றிவேல் கந்தனை இத்தரையில் நம்புவோர்க்கு
ஏது வினை கால பயமேன்
வீராதி வீரனை நினைப்பவர்கள் நெஞ்சினில்
வேல் நின்று துணைபுரிகுமே
வாராது நோய் இடர்கள் கிரக பகையெலாம்
மடிந்தோடும் வடிவேலென
சூராதி சூரனே சிவசுப்பிரமணியனே சிவ
சுந்தரியாள் அணைத்த குமரா
காராணை முகற்கிளைய கந்தனே அருணை மலை
கருணைகொடு வேலழகனே
காக்கவா சண்முகா பார்க்க மயிலாடி வா
கணப்பொழுது அடியார்கள் முன்
கருத்து வைத்தே தினம் நித்தமுனை வணங்கினேன்
கலியுகத் தெய்வம் நீயே
கதிரமலை உறைகின்ற சரவண பவானந்த
கதிர்காம முருகவேளே

ஓம் முருகா என்று உனை ஓயாது இரவு பகல்
உச்சரித்தே போற்றினேன்
வாராதிருப்பதற்கு உந்தனுக் கழகல்ல
மற்று மினி ஏது குமரா
தீராது உன் அன்பு என்நெஞ்சில் மாறாது
தினமு முனைப்பாடி மடிவேன்
திகழ் பெரிய வாகூர மலைகள் இரு கூறாக்கி
திருக்கோயில் உறைந்த வேலே
திருமண்டூர் வெருகல் களுதாவளை அப்பனே
திருவள்ளி மணவாளனே
தித்திக்கும் செந்தமிழர்குற்ற குலதெய்வமே
சித்தாண்டி வேல் அழகனே
தேவாதி தேவனே தெய்வானை லோலனே
திருப்புகழ் மகிழ்வாசனே
தினம் போற்றும் அடியார்கள் குறைபோக்கி அருளுவாய்
திருமுருகா கதிரைவேலே

போற்றிப்பதிக மாலை

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# அன்னையின் நினைவலைகள்

**விகீர்தி வருடம் விளங்குதை 5ம் நாள் புதன்கிழமை புனர்பூசம் நட்சத்திர பூரணைவிரதமன்னாள் திதியும் சிவயோக சித்தம் வைதிருதியோகமுடன் பூர்வபக்ஷம் - பூரணையில் அன்னை தன் புகளுடம்பை விட்டு**

**மோட்சப் பதியானாள்**

நெஞ்சினிலும் இடுப்பினிலும் நின் தாய் எனைத் தூக்கி
பஞ்சிபோல் தொட்டி தனில் படுக்க வைத்து ஆராட்டி
கொஞ்சி மகிழ்ந்து குழந்தை எனை நிலாக்காட்டி
அஞ்சுவயதாகும் வரை அன்னையரே எனைச் சுமந்து
உஞ்சினிலே எனை இருத்தி உணவூட்டி வளர்த்த மாரிக்
குஞ்சாத்த உனை நினைந்து குழறுகின்றேன் அன்னையரே.

பெற்ற தாயிடம் போகேன் உன் பின்னாலே நான் திரிவேன்
சுற்றத்தார் கேட்டால் சொல்லிடுவாய் என் மகனென்று - நான் ஏதும்
குற்றமது கண்டால் கோலால் அடித்திடுவாய்
இற்றவரையம்மா ஏசறியேன் உன் முகம் பார்த்து கற்றிடப் பள்ளிதனில்
கை பிடித்து எனைச் சேர்த்த என்
சிற்றன்னை தனை நினைந்து சேயேன் அழுகின்றேன்.

இல்லை என்று செல்லாய் இருந்தால் கொடுத்திடுவாய்
அல்லயலில் உள்ளோரிடம் அன்பு கொண்டு அரவணைப்பாய்.
நல்ல மனதம்மா நாளும் இறைவணக்கம் எந் நாளும்
வெள்ளெனையில் எழுந்து விபூதி தரித்திடுவாய்
எல்லாம் விதிப்பயன் என்பாய் உனக்கு இது நல்லநாள்
பூரணையில் நாரயணர் பதிக்கு உன் ஆத்மா சென்றங்கு வைகுந்த
மோட்சப்பதியடைய வேண்டுகின்றேன்.

அம்மா நீங்கள்
தெய்வத் தாயாகி தினமும் எமைக்காத்து அருள்
மாரியம்மா

அன்புடன் உன்னை நினைவுறும்,
**உன் மகன் மூர்த்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்(வு) இல்லை
செய்நன்றி கொன்ற மகற்கு.

என்ற வையகம் போற்றும் வள்ளுவப் பெருந்தகையோன் பொய்யா மொழித் தெய்வப் புலவன் நல்வாக் கதற்கொப்ப எம் அன்னையர் சங்கமமான திருக்கோயிலூர் புண்ணிய மண்ணைத் தொட்டு வணங்கிக் கொண்டு மானிடராகிய நாம் ஒருவர் செய்த சிறிய நன்றியானாலும் மறப்பது நன்றன்று.

எனவே பல வழிகளில் தாயாரின் இறப்பதினைக்கேட்டு ஓடி வந்து அருகிருந்த அன்னைகள் தங்களுக்கு முதல் நன்றி கூறி, எங்கள் துயரத்தில் பங்கு கொண்டு உதவி ஒத்தாசை புரிந்த இளைய தலைமுறையினரையும் மறப்பதற்கில்லை, அன்னையின் நல்லடக்கத்தன்று பாடைக்கு தோள் கொடுத்தும் முன் பின் வந்த எம் சொந்தங்களுக்கும், மயானக் கரையில் வாய்கரிசியிட்டது மட்டுமல்லாமல் கரம் தாங்கி கை மண்ணிட்ட அத்தனை உள்ளங்களுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளேன்.

என்தாயார் உயிர் நீத்த அன்று முதல் எட்டு வரை, முப்பத்தொரு நாள் வரையும், ஐந்தாம் வேதமாகிய வைகுந்த அம்மானை பாடிய கற்றோர் அனைவருக்கும் என் நன்றி உரித்தாகுக மேலும் காலை பகல் மாலை இரவுபராது உண்டி கொண்டு ஒப்புவித்த அன்னக் கொடையாளருக்கும் பகுந்தழித்த மக்கள், மருமக்கள், உற்றார்களுக்கும் நன்றி உரித்தாகட்டும். மற்றும் பல கிராமங்களில் இருந்து வந்து எங்கள் துயரத்தில் பங்குகொண்டு ஆறுதல் வார்த்தைகள் கூறி எம் பாரத்தை குறைத்த அன்பு நெஞ்சங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

எம் மாதாவின் அந்தியொட்டி கிரியைதனை சிறப்புடன் நடத்திய பெருமைக்குரிய பே ராளர் திருக்கோயில், சித்திர வேலாயுத சுவாமி கோயில் பிரதம குரு சிவ. ஸ்ரீ. நீதிநாதன் அங்குசக் குருக்கள் ஐயா அவர்களுக்கும் என் நன்றி மலர்களைச் சொரிந்தும். என் நண்பர்கள் எவரேனும் விடுபட்டு இருப்பின் அவர்களுக்கு நன்றி சொல்லி எங்கள் அம்மா வளர்த்த மக்கள் பேரக் குழந்தைகள் பூட்டி, பூட்டன்மார் அனையோருக்கும் பலமுறை நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

வணக்கம்

**அன்புடன் தங்களின் நன்றிமறவாத அன்னையரின் அன்பு மகன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விக்டரி அச்சகம், கல்முனை.0770643990

விலை. 50/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org